# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## சர்வதேச தேரவாத நிறுவனம் (கூட்டிணைத்தல்)

**சர்வதேச தேரவாத நிறுவனத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

*பொலன்னறுவை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ மைத்ரீபால சிறிசேன அவர்களால் 2023, பெப்புருவரி மாதம் 10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2023, சனவரி மாதம் 17 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

[ ***166 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 30.00** **தபாற் செலவு : ரூபா 50.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## சர்வதேச தேரவாத நிறுவனம் (கூட்டிணைத்தல்)

### சர்வதேச தேரவாத நிறுவனத்தைக் கூட்டிணைப்பதற் கானதொரு சட்டம்

முன்னுரை

"சர்வதேச தேரவாத நிறுவனம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான நிறுவனமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட நிறுவனத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுறநிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இலங்கையில் இதற்கு முன்னர் தாபிக்கப் பட்டுள்ளதாதலாலும்:

அத்துடன் சொல்லப்பட்ட நிறுவனம், எந்தப் பல்வேறு குறிக் கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுகாலவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித் துள்ளதாதலாலும், சொல்லப்பட்ட விண்ணப் பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாவிருக்குமாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்

**1**. இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, சர்வதேச தேரவாத நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

(மேஜர்) பிரதீப் உந்துகொட மன்றத்தைக் கூட்டிணைத்தல்

**2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் "நிறுவனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சர்வதேச தேரவாத நிறுவனத்தின் தற்போதைய உறுப்பினர்களாக வுள்ள அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாப னத்தின் உறுப்பினர்களாக, இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும், (இதனகத்துப் பின்னர் "கூட்டிணைக்கப்பட்ட குழு" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "சர்வதேச தேரவாத நிறுவனம்" என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாதல்

வேண்டும். அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம். அத்துடன் அது பொது இலச்சனையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும், அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்டகுழு இலாப நோக்கமற்ற நிறுவனமாக செயற்படுதல்

**3**. கூட்டிணைக்கப்பட்ட குழு இலாப நோக்கமற்றதோர் நிறுவன மாக தனித்து முழுவதும் சமுகத்தினதும் அதன் உறுப்பினர்களின் நன்மைக்காக மாத்திரமே செய்படுதலும் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் பொதுக் குறிக் கோள்கள்

**4**. கூட்டிணைக்கப்பட்ட குழு அமைத்துருவாக்கப்படுவதற் கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது:-

(அ) பௌத்த போதனைகளுக்கிணங்க இறுதி விடுதலை யாகிய விமோசனத்தை தனியாக அடைந்து கொள்வதற்கு அவசியமான சித்தாந்த அறிவு மற்றும் தியான அறிவு படைத்த இல்லற மற்றும் துறவரர்களை பயிற்றுவித்தல்;

(ஆ) பௌத்த போதனைகளுக்கிணங்க இறுதி விடுதலை யாகிய விமோசனத்தை அடைந்து கொள்வதற்கு பிறரை வழிநடாத்துவதற்காக இல்லற மற்றும் துறவரங்களை பயிற்றுவித்தல்;

(இ) தேரவாத போதனைகளுக்கிணங்க சரியான ஒழுக்க விழுமியங்களை பின்பற்றுவதன்மூலம் சாசனத்தை நிலைநாட்ட தகுதியான பௌத்த பிக்குகளை உருவாக்கு தல்;

(ஈ) தேரவாத போதனைகளுக்கு உட்பட்ட புத்தகங்களை பிரசுரித்தல் மற்றும் மொழிபெயர்த்தல்;

(உ) நடைமுறையில் உள்ள சட்டதிட்டங்கள் மற்றும் கலாசார அங்கீகாரங்களுக்கு மதிப்பளித்து உள்நாட்டு மற்றும்

சர்வதேச ரீதியாக நீதி தர்மத்தினை உலகெங்கிலும் பரவச் செய்வதற்காக தர்ம போதகர்களை பயிற்றுவித்தல் மற்றும் அவர்களை வழியனுப்புதல் ; அத்துடன்

(ஊ) மேலே (அ) பந்தியில் உள்ள நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக நிறைவேற்று சபையினால் தீர்மானிக்கப் படும் ஏனைய அனைத்து விடயங்களையும் செயற்படுத்து தல்.

*அரசாங்கத்தின் அல்லது மாகாணத்தின் அமைச்சினது அல்லது திணைக்களத் தினது பணியுடன் முரண்பாடில்லா திருப்பதனைக் கூட்டிணைக்கப் பட்ட குழு உறுதிப் படுத்துதல்*

**5**. கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்கள்,கூட்டுத்தாப னத்தின் பணிக்கும் அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் ஏதேனும் அமைச்சினால் அல்லது திணைக்களத்தினால் ஒரே நேரத்தில் நிறைவேற்றப்படும் ஏதேனும் பணிக்கும் இடையே முரண்பாடெதனையும் உருவாக்காத வகையிலான அத்தகைய முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

*கூட்டிணைக்கப் பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தல்*

**6**. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தலும் நிருவகித்தலும் 12 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளின்மூலம் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான பதவி தாங்குநர்களைக் கொண்டுள்ளதும், (இதனகத்துப்பின்னர் ''நிறைவேற்றுச் சபை'' எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான) சபையொன்றினால் நிறைவேற் றப்படுதல் வேண்டும்.

(2) (அ) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முற்போந்த நாளன்று பதவிவகிக்கின்ற மன்றத்தின் முகாமைச் சபை, 12 ஆம் பிரிவின் கீழான விதிகளின்மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முதலாவது சபை நியமிக்கப் படும்வரை அல்லது தேர்ந்தெடுக்கப்படுவரை கூட்டிணைக்கப்பட்ட குழுவின் சபையாகப் பணியாற்றுதல் வேண்டும்.

(ஆ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின முதலாவது நிறைவேற்றுச் சபை இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து ஓராண்டிற்குள் நியமிக்கப்படுதல் அல்லது தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(3) (அ) போஷகர்களும் மதியுரைஞர்களும் உட்பட குழுவின் ஒவ்வொரு பதவிதாங்குநரும் ஆறாண்டு காலப்பகுதியொன்றுக்கு நியமிக்கப்படுதல் அல்லது தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டுமென்ப துடன், அத்தகைய எவரேனும் பதவிதாங்குநர், போஷகர் அல்லது மதியுரைஞர் சொல்லப்பட்ட ஆறாண்டு காலப்பகுதி கழிந்ததன் பின்னர் மீள நியமிக்கப்படுவதற்கு அல்லது மீளத்தேர்ந்தெடுக்கப் படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(ஆ) பதவிதாங்குநரொருவரின் இறப்பு, பதவிவிலகல், உடற்றகுதி யீனம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் காரணமாக வெற்றிடமொன்று ஏற்படும் பட்சத்தில் கூட்டிணைக்கப்பட்ட குழு, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளைக் கருத்திற்கொண்டு அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஆளொருவரைத் தேர்ந்தெடுத்தல் அல்லது நியமித்தல் வேண்டும்.

(இ) பந்தி (ஆ) வின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப் பட்ட ஆள் எந்த உறுப்பினரை அவர் அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப் பகுதிக்கு மட்டுமே பதவிவகித்தல் வேண்டும்.

(ஈ) நிறைவேற்று சபையின் தவிசாளராக தேர்ந்தெடுக்கப்படும் ஒருவர் அப்பதவியில் அதிகபட்ச பன்னிரண்டு வருடங்களுக்கு உட்பட்டு இருமுறைக்கு மேலான தடவைகளுக்கு தேர்ந்தெடுக்கப்படு வதற்கு தகுதியற்வராவார்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் உயர்சபை

**7**. (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உயர் சபையானது அதன் பொதுச் சபையாகும். அது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அனைத்து உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பொதுச்சபையின் கடமைகளாவன:-

(அ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிறைவேற்று சபையினை கூட்டுத்தாபன விதிகளுக்கு இணங்க தேர்வு செய்வது;

(ஆ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தலைமையகத்தை இடமாற்றுவதற்கான தீர்மானங்களை மேற்கொள்வது;

(இ) கூட்டிணைக்கப்பட்ட குழுவினை கலைத்துவிடுவது தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வது;

(ஈ) இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க கூட்டிணைக்கப் பட்ட குழுவின் விதிகளை இயற்றுதல் மற்றும் திருத்துதல்;

(உ) பொதுச்சபையின் கடமைகள் தொடர்பான விதிமுறை விடயங்களை சட்ட ரீதியாக இயற்றுதல்;

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிறைவேற்றுத் தத்துவங் களை மேற்பார்வை செய்வதற்கு நிறைவேற்றுச் சபை எனும் சபையொன்றினை அமைத்தல்;

(எ) நிறைவேற்றுச் சபையின் உறுப்பினர்கள் பொதுச் சபையின் வாக்கெடுப்பொன்றின் மூலம் மேற்கொள்ளப் படல் வேண்டும்; அத்துடன்

(ஏ) நிறைவேற்றுச் சபையின் உறுப்பான்மை, நிறைவேற்றுச் சபையின் கீழ் வரும் நிறுவனங்கள், அவற்றின் கடமைகள் மற்றும் அந்நிறுவனங்களின் உறுப்பினர்களின் தகைமை கள் மற்றும் நியமன முறைகள் தொடர்பில் விதிகள் மூலம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

*கூட்டிணைக்கப் பட்ட குழுவின் நிறைவேற்றுச் சபை*

**8.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிறைவேற்றுப் பொறுப்புகளை முகாமை செய்வதற்காக நிறைவேற்றுச் சபை எனும் குழுவொன்று நிறுவப்படுதல் வேண்டும்.

(2) நிறைவேற்றுச்சபையின் கடமைகளாவன:-

(அ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பெயரில் உள்நாட்டு வெளிநாட்டு ஒப்பந்தங்களில் ஈடுபடத் தீர்மானம் செய்தல்;

(ஆ) பொதுச் சபையினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங் களை நடைமுறைப்படுத்தல்;

(இ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களை நிறை வேற்றத் தோதுவான செயற்பாடுகளுக்கு அனுமதியளித் தல் மற்றும் அதனை செயற்படுத்தல் ; அத்துடன்

(ஈ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களை நிறை வேற்றத் தோதுவான ஏனைய நடவடிக்கைகள் மேற் கொள்ளல்.

(3) நிறைவேற்றுச் சபைக்கான உறுப்பினர்களை தேர்வுசெய்வது, பொதுச் சபையின் வாக்கெடுப்பின் மூலமே நடைமுறைப்படுத்தப் படல் வேண்டும்.

(4) நிறைவேற்றுச் சபையின் உறுப்பான்மை, நிறைவேற்றுச் சபையின்கீழ் வரும் நிறுவனங்கள், அவற்றின் கடமைகள் மற்றும் அந்நிறுவனங்களின் உறுப்பினர்களின் தகைமைகள் மற்றும் நியமன முறைகள் தொடர்பில் விதிகள் மூலம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் செனட் சபை

**9**. (1) கௌரவ பிக்குகள் மற்றும் பிக்கு சீடர்களுக்கான நீதி ஒழுக்க விழுமியங்கள் தொடர்பாக மற்றும் நிறைவேற்றுச் சபையின் தீர்மானங்கள் தொடர்பாக கலந்துறையாடுவதற்கும் கருத்துறைப்ப தற்கும் ஆலோசனை முன்வைப்பதற்கும் மற்றும் பொதுச் சபைக்கு ஆலோசனைகள் முன்வைப்பதற்குமாக செனட் சபை எனும் சபையொன்று நிறுவப்படுதல் வேண்டும்.

(2) செனட் சபையின் நடவடிக்கைகள் மற்றும் அதன் முறைமைகள் பற்றிய கோட்பாடுகள் செனட் சபை மூலம் ஏற்பாடுகள் செய்யப் படுதல் வேண்டும்.

(3) செனட் சபையின் தத்துவங்கள் தொடர்பில் பொதுச் சபையின் மூலம் விதிகள் ஏற்பாடுகள் செய்யப்படுதல் வேண்டும். அதன் விதிகள் பொதுச் சபை மூலம் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் நடைமுறைப்படுத்தப்படும்.

(4) செனட் சபை, பொதுச் சபைக்கு மாத்திரம் பொறுப்புடையதாதல் வேண்டும்.

*கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒழுக்காற்றுக் குழு*

**10.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அனைத்து உறுப்பினர்களினதும் மற்றும் தேர்ச்சி பெற்ற மற்றும் பயிலுனர்களினதும் ஒழுக்கவியல் நடவடிக்கைகளுக்காக ஒழுக்காற்றுக் குழுவொன்று நிறுவப்படுதல் வேண்டும்.

(2) ஒழுக்காற்றுக் குழு பொதுச் சபைக்கு மாத்திரம் பொறுப்புடையதாதல் வேண்டும்.

(3) ஒழுக்காற்றுக் குழுவுக்கான பொறுத்தமான விதிகள் ஒழுக்காற்று குழுவின் மூலம் ஏற்பாடு செய்யப்பட வேண்டுமென்பதுடன், அவ்விதிகள் பொதுச் சபையின் மூலம் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் அமுலுக்கு வருதலும் வேண்டும்.

(4) நிறைவேற்றுச் சபைமூலம் எடுக்கப்படும் தீர்மானங்கள் தொடர்பில் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒருவர் மூலமோ அல்லது செனட் சபையின் மூலம் ஒழுக்காற்றுக் குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டதன் பின்னர் ஒழுக்காற்றுக் குழுவால் அது தொடர்பில் தர்மநீதி ஒழுக்கங்களுக்கிணங்க சாதாரணமானதோர் விசாரணையின் பின்னர் நிறைவேற்றுக் குழுவின் அத்தகைய தீர்மானமொன்று தர்மநீதிக்கு, இச்சட்டத்திற்கு, கூட்டுத்தாபனத்தின் சட்டவிதிகளுக்கு அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்திற்கு முரண்படாததாக தீர்மானிக்கப்படுமிடத்து, நிறைவேற்றுச் சபையின் அவ்வாறான தீர்மானத்தை அமுலாக்குவதிலிருந்து தடைசெய்வதற்கு ஒழுக்காற்றுக் குழுவுக்கு அதிகாரமுடையதாதல் வேண்டும்.

(5) ஒழுக்காற்றுக் குழுவானது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களின், தேர்ச்சி பெற்ற மற்றும் பயிலுனர்களினதும் ஒழுக்க விழுமியங்கள் மீதும் நிறைவேற்றுச் சபையின் தீர்மானம் மீதும் தர்ம ஒழுக்கத்தின் அடிப்படையில் சாதாரணமானதோர் தீர்ப்பினை வழங்கவேண்டியது, தேரவாத சம்பிரதாயங்கள் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட பழைமையான ஆறு தர்ம சங்காயனாக்களின் மூலம் ஒப்புக்கொள்ளப்பட்ட இன்றுவரை பர்மா, தாய்லாந்து, லாஓஸ், காம்போஜ் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளிலும் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் மிகவும் பாதுகாப்பான முறையில் பேணப்படுகின்ற தேரவாத திரிபிடகய, ''அர்த்தகதா'' மற்றும் ''டிகா'' மற்றும் தேரவாதத்திற்கிணங்க தேரவாதத்திற்கு மாற்ற மில்லாத முறையில் எழுதப்பட்ட வியாக்கியான ஏடுகளில் அடங்கியுள்ள தர்ம ஒழுக்க விடயங்கள் மற்றும் கௌரவ பண்டிதர்களின் தேரவாதத்திற்கு முரணாகாத தர்ம ஒழுக்கம் சம்பந்தமான கருத்துக்கள் மீதுமாகும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் பொதுத் தத்துவங்கள்

**11.** இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழு பின்வரும் தத்துவங்களுட்பட, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள் களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மைத்துமானதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும்:-

(அ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக்கூடிய காணிகளை அல்லது கட்டிடங்களைக் கொள்வனவு செய்தல், கொள்ளுதல், வாடகைக்கு எடுத்தல், நிர்மாணித்தல் புனரமைத்தல் மற்றும் வேறு வகையாகப் பெறுதலும் அத்துடன் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் உசிதமானதெனக் கருதக்கூடியவாறு அவற்றைக் கையாளுதலும் அல்லது கையுதிர்த்தலும்;

(ஆ) பிணைப்பொறுப்புடனோ அல்லது பிணைப்பொறுப் பின்றி நிதிகளைக் கடனாகப் பெறுதலும் அல்லது திரட்டுதலும் மற்றும் காசாக அல்லது பொருளாக மானியக்கொடைகளையும், கொடைகளையும் அல்லது நன்கொடைகளையும் பெறுதலும் ;

ஆயின், சபையானது கூட்டிணைக்கப்பட்ட குழுவிற்கு அளிக்கப்பட்ட எல்லா வெளிநாட்டு மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பிலும், நிதி என்னும் விடயம் எவ்வமைச்சருக்குக் குறித்தளிக்கப் பட்டுள்ளதோ அவ்வமைச்சரின் அமைச்சினது வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் எழுத்தி லான முன்ங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண் டும்.

(இ) மாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங் கள் மற்றும் வேறு கைமாற்றத்தகு சாசனங்கள் என்பவற்றை ஆக்குதலும், வரைதலும், ஏற்றுக்கொள்ளு தலும், கழிப்பனவு செய்தலும், புறக்குறிப்பிடுதலும், கைமாற்றதலும், வாங்குதலும், விற்றலும், வழங்குதலும் மற்றும் ஏதேனும் வங்கியில் கணக்குளைத் திறத்தலும், தொழிற்படுத்தலும், பேணுதலும், மூடிவிடுதலும்;

(ஈ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்காக உடனடியாகத் தேவைப்படாத ஏதேனும் நிதிகளைக் குழு தீர்மானிக்கக்கூடியதான அத்தகைய முறையில் முதலீடு செய்தலும்;

(உ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் ஏதேனும் சட்டமுறையான நம்பிக்கைப் பொறுப்பை அல்லது ஏதேனும் அசையாத அல்லது தனிப்பட்ட ஆதனத்தைப் பொறுப்பேற்றலும், ஏற்றுக் கொள்ளுதலும், நிறைவேற்றுதலும், புரிதலும் மற்றும் நிருவகித்தலும்;

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவலர்களையும், சேவையாளர்களையும் நியமித்தலும், தொழிலுக்கமர்த்துதலும், பதவிநீக்குதலும் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்தலும், அர்வகள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளங்களையும், படிகளையும், பணிக்கொடைகளையும் அவர்களுக்குச் செலுத்துதலும்; அத்துடன்

(எ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களைத் தகுந்த முறையிலும் பயனுள்ள வகையிலும் நிறைவேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது உசிதமானவாறான வேறெல்லாக் காரியங்களையும் செய்தலும்.

கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகள்

**12.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஏதேனும் பொதுக்கூட்டத்திலும் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்கும் பெரும்பான்மை கொண்டும், பின்வரும் விடயங்களுள் எல்லாவற்றுக்காகவும் அல்லது அவற்றின் ஏதேனும் ஒன்றக்காக இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளை காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்கு சட்டமுறையானதாதல் வேண்டும்:-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல், உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்கள் விலகுதல் அல்லது அவர்களை விலக்குதுல் அல்லது அவர்களை பதவி நீக்குதலும் மற்றும் உறுப்பினர்களினால் செலுத்தப்படற்பாலனவான கட்டணங்களும்;

(ஆ) கூட்டிணைக்கப்பட்ட குழு அதன் நிறைவேற்றுச் சபை, செனட் சபை மற்றும் ஒழுக்காற்றுக் குழுவின் உறுப்பினராக்குவதற்கான தகைமைகளும் தகைமையீனங்களும் மற்றும் பதவி தாங்குநர்களின் எண்ணிக்கை;

(இ) சபையின் பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தலும் அல்லது பதவிதாங்குநர்கள் பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் அத்துடன் அவர்களின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள்;

(ஈ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பல்வேறு அலுவலர்களின், முகவர்கள் மற்றும் சேவையாளர்கள் என்போரின் நியமனத்திற்காக நியதிகளும் அவர்களின் தத்துவங் களும், பணிகளும் மற்றும் கடமைகளும்;

(உ) சபையானது அல்லது அதன் ஏதேனும் உபகுழுவினது கூட்டங்களைக் கூட்டுதலிலும் நடாத்துதலிலும் பின்பற்றப் பட்டவேண்டிய நடவடிக்கை முறைகள், அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்கள், நிகழ்ச்சிநிரல், அதன் கூட்ட நடப்பெண் அத்துடன் அதில் அலுவல்களை நடாத்துதல்;

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஆதனத்தை நிருவகித்த லும் முகாமை செய்தலும்;

(எ) பொதுவாக கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தலும், அதன் குறிக்கோள்களை எய்துதலும், கூட்டுத்தாபனத்தைக் கலைத்தலும் ; அத்து டன்

(ஏ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் யாப்பினை நிறைவேற்று தல் மற்றும் திருத்தங்களைக் கொண்டுவருதல்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் ஆக்கப்பட்ட விதி எதுவும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்றாற்போன்று, அதேபோன்ற கூட்டமொன்றில் அதே முறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது அது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கமைந்தோ ராதல் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதிகள் வர்த்தமானியில் வெளி யிடப்படுதல் வேண்டும்.

உறுப்பினர்கள் பற்றிய இடாப்பு

**13.** சபையானது உறுப்பினர்கள் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும். இதில் உறுப்பினர்களின் பெயர், முகவரி மற்றும் வேறு அத்தியாவசியமான விபரங்கள் என்பன உள்ளடக் கப்படுதல் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் நிதியம்

**14.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழு அதன் சொந்த நிதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவிற்காகவும் அது தொடர்பாகவும் கொடை, இறுதிவிருப்பாவணக் கொடை, நன்கொடை, ஒப்பப்பணம், உதவு தொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடை என்ற வகையாகப் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தினது வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(3) சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தத்துவங்களை யும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகிப்பதிலும், புரிவதி லும், நிறைவேற்றுவதிலும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகை களும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்

**15.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவானது, அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் மற்றெல்லாக் கொடுக்கல்வாங்கல்கள் என்பன பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் கணக்குகள், கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அல்லது கணக்காய் வாளர் தலைமையதி பதியினால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற வொரு கணக்காய்வாளரி னால் வருடாந்தம் கணக்காய்வு செய்யப் படுதல் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக "தகைமைபெற்ற கணக்காய் வாளர்" என்பது -

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் உறுப் பினராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறே தேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருந்து, அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளரொருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர்; அல்லது

(ஆ) எக்கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர் களுள் ஒவ்வொருவரும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத்தி னால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக இருந்து, அத்தகைய நிறுவகத் தினால் கணக்காளரொருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவு முள்ளாரோ அக்கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

**16**. (1) குழுவானது ஒவ்வொரு நிதியாண்டுக்குமான கூட்டி ணைக்கப்பட்ட குழுவின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கை யொன்றைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அறிக்கையை, கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் பற்றிய கூற்றுடன் சேர்த்து அத்தகைய அறிக்கை எந்த ஆண்டு தொடர்பானதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஆண்டின் ஆறு மாதங்கள் முடிவுறுவதற்கு முன்னர் பாராளுமன்றத்திற்கு சமர்ப் பித்தலும் வேண்டும். வருடாந்த அறிக்கை

(2) நிதியாண்டின்போது கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் பெறப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பணங்கள் தொடர்பாகத் தனிவேறான கணக்கொன்று (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

*மன்றத்தினால் செலுத்த வேண்டிய வையும் மன்றத்திற்கு செலுத்தப்படற் பாலனவுமான தனிசுகள்*

**17**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று இருக்கின்றதான மன்றத்தின் எல்லாத் தனிசுகளும் பொறுப்புகளும், இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்பானவான ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங் களுக்காகக் கூட்டிணைக்கப்பட்ட குழுவிற்குச் செலுத்தப்படலும் வேண்டும்.

*கூட்டிணைக்கப் பட்ட குழு அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்*

**18**. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கூட்டிணைக்கப்பட்ட குழுவானது ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதிவிருப் பாவணக் கையளிப்பு என்பவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடியதான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்வதற்கும் வைத்திருப்பதற்கும் சட்டப்படி ஆற்றலுடையதும் இயலுமாதலாகுதலும் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆதனம் யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கமையவும் அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவுள்ள தத்துவத்துடன் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் வைத்திருக்கப்படுதலும் வேண் டும்.

*பணங்களையும், ஆதனத்தையும் பயன்படுத்துதல்*

**19**. எவ்வாறாயினும் பெறப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணங்களும் ஆதனமும் அதன் குறிக்கோள்களை மேம்படுத்து வதற்காக மாத்திரம் பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அதன் பாகம் எதுவும் பங்கிலாபம், மிகையூதியம் அல்லது இலாபம் என்ற வகையில் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படு தலோ அல்லது கைமாற்றப்படுதலோ ஆகாது.

*கூட்டிணைக்கப் பட்ட குழுவின் இலச்சினை*

**20**. (1) கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது சபையின் இரு உறுப்பினர்களது முன்னிலையில் அன்றி எத்தகையதுமான சாசனமெதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் தமது

பெயர்களை எழுதி கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியொருவராகக் கையொப்பமிடுவதின்றும் தனிவேறான தாதலும் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினை, சபையினால் முடிபுசெய்யப்படக்கூடியவாறான சபையின் அத்தகைய பதவி தாங்குநரொருவரின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டும்.

*கலைக்கப்பின் போது எஞ்சியுள்ள ஆதனம்*

**21.** (1) கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதன்மீது அதன் எல்லாக் கடன்களும் மற்றும் பொறுப்புக்களும் தீர்க்கப்பட்டதன் பின்னர் எத்தகையதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால், கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அதன் விதிகளின்படி அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தை பகிர்ந்தளித்தல் தடை செய்யப்பட்டுள்ளதுமான வேறு ஏதேனும் நிறுவனத்திற்கு கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்திற்காக, பொதுக்கூட்டமொன்றில் சமுகமளித்திருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளின்மூலம் கலைப்புக்கு நேர்முன்னர் தோதான நிறுவனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்*

**22.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் குழுவினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**23.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.